Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 120

வியாழக்கிழமை
26 மார்ச் 2026

பங்குனி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் -12
விலை - ரூபா 50



## முத்த ஊடகர் சலீம் மறைவு!

அம்பாறை, மார்ச் 26
அம்பாறையைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் கலாபூசணம் ஏ.எல்.எம்.சலீம் (வயது -75) நேற்றுக் காலமானார். »11

# எரிக்கப்போகிறது வெயில்; தகிக்கப்போகிறது இலங்கை!

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உக்கிரம்

வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 26
நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பமான கால நிலை, எதிர்வரும் வாரங்களில் மேலும் உக்கிரம் பெறும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் மெரில் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். »11

போதைப்பொருள் கடத்தல்

## ஆபத்தான பின்னணியுள்ள 29 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 26
சர்வதேச போதைப்பொருள் வலையமைப்புடன் தொடர்புடைய 29 சந்தேகநபர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று, பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போதைப் பொருள் »11

## சுரேஷ்சாலே திடீர் சுகவீனம்

உச்சக்கட்டப் பாதுகாப்புடன் மருத்துவமனையில் அனுமதி



கொழும்பு, மார்ச் 26
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில், தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்கப்பட்டுவரும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே, திடீர் சுகவீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் »11

'காவிய நாயகன்'

## திருப்பாடுகள் ஆற்றுகை ஆரம்பமாகின்றது இன்று

கொழும்பு, மார்ச் 26
இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் வகையில், திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் திருப்பாடுகள் ஆற்றுகை இன்று ஆரம்பமாகவுள்ளது.
இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தில், இன்று தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதிவரை »11



## நல்லை குருமகா சந்நிதானத்தின் முதலாவது குருபூசை இன்று!

கொழும்பு, மார்ச் 26
ஈழத்து சைவத்தமிழ் உலகில் வர்க்கபேதமற்ற முதலாவது ஆதீனத்தை உருவாக்கிய நல்லை முதலாம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் முதலாவது »11

## மோ.சைக்கிள் மோதி வயோதிபர் துயரச்சாவு

யாழ். நகரில் துயரம்



கொழும்பு, மார்ச் 26
மோட்டார்சைக்கிள் மோதித் தள்ளியதில் படுகாயம் அடைந்த வயோதிபர், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்தவரான கனகரத்தினம் கனகதாஸ் (வயது-62) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். »11

## பொருளாதார வளர்ச்சிக்கு விசேட நிபுணர்கள் குழு

அமைச்சரவை அனுமதி

விரிவு பக்கம்:-03

வடக்கு மக்களுக்கு

## காணி உரிமங்கள் வழங்குவதற்கு ஐ.நா.வின் ஒத்துழைப்பு அவசியம்!

ஆளுநர் வேண்டுகோள்

விரிவு பக்கம்:-06



## மாந்தையில் கிரவல் அகழ்வு; கைப்பற்றப்பட்டன வாகனங்கள்

சந்தேகநபர்களை கைதுசெய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 26
முல்லைத்தீவு - மாந்தை கிழக்குப் பகுதியில் கிரவல் அகழ்வுக்குப் பயன்பட்ட கனரக வாகனங்கள் வனவளத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.
மாந்தை கிழக்கு-கொல்லவிளாங்குளம் பகுதியில் சட்டவிரோத கிரவல் அகழ்வு »11

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தராக பொறுப்பேற்றார் பேராசிரியர் வேல்நம்பி

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 11ஆவது துணைவேந்தராக, கணக்கியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற »11




மூச்சந்தி முரளி

"இப்ப பொலிஸ் பிடிக்குற எல்லாருக்கும் சொல்லிவைச்ச மாதிரி வருத்தம் வந்து ஆஸ்பத்திரியில படுக்கிறது என்ன மாதிரி டிசைன்?"

மக்கள் [illegible] நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருள்களின் விலையுயர்வால் கட்டுமானத்துறை திண்டாட்டம்



கொழும்பு, மார்ச் 26

நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாகக் கட்டுமானப்பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. இதன் காரணமாக கட்டுமானப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் நெருக்கடி உருவாகியுள்ளதாகக் கட்டுமானத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரண்டு வருடங்களாகக் கடும் வீழ்ச்சியைக் கண்டிருந்த கட்டுமானத்துறை, தற்போதே ஓரளவு மீண்டெழ ஆரம்பித்திருந்தது. எனினும் எரிபொருள் விலைஉயர்வுஇந்தத்துறையை மீண்டும் ஒரு 'மரணப் பொறிக்குள்' தள்ளியுள்ளது. ஒரு மூடை சிமெந்தின் விலை 200 ரூபாவினாலும், இரும்புக் கம்பிகளின் விலை சுமார் 100 ரூபாவினாலும் அதிகரித்துள்ளன. எரிபொருள் விலை அதிகரிப்பால் போக்குவரத்துச் செலவுகள் உயர்ந்துள்ளநிலையில், மணலின் விலை சுமார் 13 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது.

இந்த விலை உயர்வு சாதாரண மக்களையும் ஒப்பந்தக்காரர்களையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது. குறிப்பாக, வங்கியில் கடன் உதவிகளைப் பெற்று வீடுகளைக் கட்ட ஆரம்பித்தவர்கள் தற்போது அந்தப் பணத்தைக் கொண்டு பணிகளை நிறைவுசெய்து கொள்ள முடியாமல் தவித்துவருகின்றனர். இந்தத் துறைக்கு முறையான ஒழுங்குபடுத்தல் அல்லது நியாமான விலைக் கட்டுப்பாடு இல்லை எனில், மீண்டும் இந்தத் துறை முற்றாக முடங்கும் அபாயம் ஏற்படும் - என்றார். (ச-இ)

## வெளிநாட்டுச் சிகரெட்டுகள் மீட்பு!

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ஆயிரத்து 300 வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 37 வயதுடைய சீனப் பிரஜை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இரகசியத் தகவலுக்கு அமைய கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் குழுவால் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கறுவாத்தோட்டம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (எஇ)

## உயர்தரப் பரீட்சார்த்திகளிடம் இணையவழி விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 26


2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் இணையவழியில் விண்ணப்பிக்க முடியும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே அறிவித்துள்ளார். பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சைத்திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்கவேண்டும்.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை மாணவர்கள் தமது அதிபர்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

தனிப்பட்ட ரீதியில் பரீட்சைக்குத் தோற்றுவோர் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி இணையத்தளத்தில் உள்நுழைந்து சுயமாக விண்ணப்பிக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் ஏப்ரல் 24 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் 0112785922, 0112784537, 0112786616, 0112784208 எனும் தொலைபேசி இலக்கங்கள் அல்லது gcealexam@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாக மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## எரிபொருள் விலை குறைந்தால் பஸ் கட்டணம் குறைக்கப்படும்!

### அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

எதிர்காலத்தில் எரிபொருள் விலை குறையும் பட்சத்தில், அதன் நன்மையை மக்களுக்கு வழங்கும்வகையில் பேருந்து கட்டணங்கள் குறைக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வருடாந்தப் பேருந்துக் கட்டணத் திருத்தக் கொள்கையின்படி, எதிர்வரும் ஜூலை மாதம் மீண்டும் ஒருமுறை பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

தற்போதைய எரிபொருள் விலையேற்றத்திற்கு ஏற்ப ஏற்கனவே கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளமையே இதற்குக் கா[illegible]மாகும்.

தனியார் பேருந்துச் சங்கங்கள் கோரிக்கை விடுத்தவுடன் உடனடியாகக் கட்டணங்களை மாற்ற முடியாது. மதிப்பீட்டுப் பணிகள் நடந்துகொண்டிருந்தபோது, ஒருசில சங்கங்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டு மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி [illegible] அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

**சுபிரி தன சம்பத** — DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 25.03.2026 | புதன்கிழமை | 0852 | S | 2 3 7 5 1 2 |

**Super Ball** — DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 25.03.2026 | புதன்கிழமை | 3118 | V | 17 19 66 73 |

**சனிதா** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 25.03.2026 | புதன்கிழமை | P | 06 20 41 57 | 5279 |

**SASIRI** — DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 25.03.2026 | புதன்கிழமை | 0948 | 07 26 35 |

**லக்ன ராசி** — DLB

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 25.03.2026 | புதன்கிழமை | மிதுனம் | 06 18 25 53 | 4830 |

**KAPRUKA** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 25.03.2026 | புதன்கிழமை | Z | 04 | 28 37 44 51 | 2294 |

**அத கோடிபதி** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 25.03.2026 | புதன்கிழமை | Y | 20 36 46 51 | 2944 |

## இலங்கைத் தேயிலைக்கு மவுசு ஏற்றுமதிக்கு விசேட நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 26

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக, அங்குள்ள மக்கள் உணவுப்பொருள்களைக் கையிருப்பில் வைக்க முற்பட்டுள்ளதால், இலங்கைத் தேயிலைக்கான கேள்வி கணிசமாக அதிகரித்துள்ளதாகத் தேயிலைச் சபையின் தலைவர் ராஜ் ஒபேசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த வார ஏலத்தில் ஒரு கிலோ தேயிலையின் சராசரி விற்பனை விலை ரூ. 1,153 ஆகப் பதிவாகியுள்ளது. ஏலத்தில் விற்பனையாகாத தேயிலையின் அளவு வெறும் 8% முதல் 10% வரை மாத்திரமே உள்ளது. இது சந்தை மிகவும் சுறுசுறுப்பாக இயங்குவதைக் காட்டுகிறது. ஹோர்முஸ் நீரிணை மூடப்பட் டமை மற்றும் போர் மோதல்களால் குவைத், சவூதி அரேபியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளுக்கான நேரடி ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. துருக்கி மற்றும் ஈராக் போன்ற நாடுகளுக்கு மாற்று கப்பல் பாதைகள் ஊடாகத் தேயிலை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மூலம் சந்தைப் பாதிப்புகள் படிப்படியாகக் குறைக் கப்பட்டுள்ளன.

தேயிலைஉற்பத்தியைத்தடையின்றி முன்னெடுக்க அரசாங்கம் திட்டங் களை வகுத்துள்ளது. தேயிலை விவசாயி கள் தடையின்றிச் செய்கையில் ஈடுபட ஏதுவாக, அடுத்த மூன்று மாதங்களுக்குத் தேவையான உரத்தை வழங்கும் விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேயிலைத் தொழிற்சாலைகளின் இயந்திரங்களை இயக்கத் தேவையான எரிபொருளைத் தடையின்றி வழங்க விசேட சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சிக்கு விசேட நிபுணர்கள் குழு

## அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, மார்ச் 26**

**நிலையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஹான்ஸ் விஜேசூரிய தலைமையில் விசேட நிபுணர் குழுவை நியமிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சமர்ப்பித்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.**

12 உறுப்பினர்களை உள்ள டக்கியவகையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பொருளாதாரத்தில் நிலையான வளர்ச்சியை அடைவதற்கும் பராமரிப்பதற்கும் புதுமையான மற்றும் தொலைநோக்கு அணுகுமுறைகளை ஆராய்ந்து செயற்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசியக் கொள்கைகள், திட்டமிடல்கள் மற்றும் செயற்கட்டமைப்புகளுக்கு இணக்கமான முறையில் ஆற்றல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை ஹன்ஸ் விஜேசூரிய தலைமையிலான குழு தயாரிக்கவுள்ளது. (ச-இ)




## திசைகாட்டி உடைச்சால் மண்குடம்!

**யாழ்ப்பாணத்துக்கெண்டே தனியா ஒரு கின்னஸ் சாதனைப் புத்தகம் அடிச்சு விடலாம் போல கிடக்கு. அந்தளவுக்கு சாதனைக்குமேல சாதனை செய்யிறதில எங்கட ஆக்கள் முட்டிமோதுகினம். கின்னஸ் சாதனையள் கனக்க விதத்தில இருக்கு. மெதுவாக நடக்கிறது, மெதுவாச் சாப்பிடுறது எண்டு ஆர் உலகத்திலேயே மெதுவாச் செய்யிறது எண்டதுகூட ஒருவகையில சாதனை தான். அப்பிடி உலகத்திலேயே மெதுவா றோட்டுப் போட்டு ஒரு கின்னஸ் ரெக்கோர்ட்டை தெல்லிப்பழையில எங்கட திசைகாட்டி அரசாங்கம் செய்திருக்குது.**

**தெல்லிப்பழை மாங்கொல்லை ஒழுங்கையின்ர நீளம் வெறும் 570 மீற்றர் தான். போன டிசெம்பர் 27 ஆம் திகதி உந்த ஒழுங்கையை தார் றோட்டாப் போடத் தொடங்கினவை. டிசெம்பர் 31ஆம் திகதிக்குள்ள அந்த றோட்டைப் போட்டு முடிச்சிருக்கோணும். இல்லாட்டி அதுக்கெண்டு ஒதுக்கின காசு திரும்பிப்போடும். ஆனாலும் அப்பிடி நாலுநாளில அந்த றோட்டைப் போட்டு முடிச்சால், கின்னஸ் ரெக்கோர்ட் செய்யேலா தெல்லோ. அதோட அந்த ஒழுங்கையில இருக்கிற சனங்களுக்கும் மலையில ஏறி இறங்கிற ஒரு புதுவிதமான அனுபவத்தைக் குடுக்கோணும் எண்ட நல்லெண்ணத்திலையும் ஒருமாதிரி தவண்டு தவண்டு மார்ச் 13 ஆம் திகதிதான் செய்து முடிச்சிருக்கினம். கடைசி பத்துநாளும் அந்த றோட்டில பரப்பின கருங்கல்லு அப்பிடியே இருக்க, சனங்கள் அதுக்குமேலாலா போய்வாற வாகனங்கள் எல்லாம் ஒரே கதகளி ஆட்டம் தான். சிலர் அதில சறுக்கி விழுந்துமிருக்கினம். இனியும் இப்பிடி உந்த றோட்டால சனம் அல்லாடக்கூடாது எண்டு, றோட்டு வேலை செய்யிறவையிட்ட 'கொஞ்சம் கெதியா போடுங்கோவன்' எண்டு சிலர் கேட்டிருக்கினம். அதுக்கு 'உங்கட அவசரத்துக்கு செய்யேலாது. நாங்கள் அரசாங்கத்தின்ர ஆக்கள், எங்க போய் முறைப்பாடு செய்தாலும் ஒண்டும் கிழிக்கேலாது' எண்டு திமிராச் சொல்லியிருக்கினம். சரியெண்டு, பிரதேச செயலகத்தில முறைப்பாடு செய்யப்போனால் அங்க இன்னொரு அதிர்ச்சியாம்.**

**'உந்த றோட்டு வேலை போனவருசம் டிசெம்பர் 31 ஆம் திகதியே முடிஞ்சதே' எண்டு அவையள் சொன்னதோட நிக்காமல் , அதுபற்றின அறிக்கையெல்லாம் எழுதி, வவுச்சர் எல்லாம் போட்டு, ஒப்பந்தகாரருக்கு காசும் 'செற்றில்' பண்ணின ஆதாரங்களையும் காட்டி இருக்கினம். என்னாதான் 76 நாளில றோட்டுப் போட்டு உலகசாதனை செய்தாலும், அதை வெளிப்படுத்திப் பெருமை தேடாத திசைகாட்டிக்காரரின்ர தன்னடக்கத்தையெல்லோ இந்த விசயம் காட்டுது. நாளைக்கு ஏழரை மீற்றர் படி 76 நாளில போட்டு முடிச்சிருக்கினம். உந்த றோட்டுப்போடுற ஒப்பந்தகாரருக்கு ஏழரைச் சனிபோல, அதால தான் பரிகாரம் செய்யிறதுக்காக ஒவ்வொருநாளும் ஏழரை மீற்றராப் போட்டாரோ தெரியேலை. இதுவே வேற கட்சிக் காரர் செய்திருந்தால் 'உதெல்லாம் ஊழல் மோசடி' எண்டு கெம்பிக்கொண்டு திசைகாட்டிக்காரர் வந்திருப் பினம். ஆனால் மற்றவை உடைச்சால் பொன்குடம், திசைகாட்டி உடைச்சால் மண்குடம் தானே. அதால இதை அவையள் ஊழல் மோசடி எண்டு ஒப்பாரிவைக்காமல், கமுக்கமா இருந்திட்டினம். சிலவேளை அவைக்கு இந்த விசயம் தெரியாதோ எண்டு நினைப்பியள். ஆனால் பகிடி என்னெண்டால், அந்த ஏரியாவுக்காக திசைகாட்டி ஒப்பீஸூம் அதேறோட்டிலதான் இருக்கு தாம். அப்ப எங்களுக்கு இந்தவிசயமொண்டும் தெரியாது எண்டு அவையும் புருடா விடேலாது கண்டியளோ!**

padsi@uthayan.com - பட்சி

## கல்விச் சீர்திருத்தத்துக்கு வழிகாட்டல் குழு

கொழும்பு, மார்ச் 26

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான தொடர்ச்சியான செயன்முறையைச் செயற்படுத்துவதற்கும், அந்தச் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கும், அந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்ட ஒரு வழிகாட்டுதல் குழுவை நியமிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தச் செயல்முறையானது, தற்போதைய அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க, 2026ஆம் ஆண்டில் முதலாம் தரத்துக்கு செயற்படுத்தப்பட்டது. மேலும், ஆறாம் வகுப்புக்கான சீர்திருத்தங்கள் 2027ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த வழிகாட்டுதல் குழுவை நியமிக்கவேண்டியதன் அவசியம் கண்டறியப்பட்டுள்ள நிலையில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரான பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (ச-இ)

## வட்டி வீதங்களில் மாற்றம் இல்லை!



கொழும்பு, மார்ச் 26

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளுக்கமைய கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றி அதேமட்டத்தில் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாணயக்கொள்கைச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, ஒரு நாள் கொள்கை வட்டி வீதம் 7.75% என்ற மட்டத்தில் மாற்றமின்றித் தொடரும். உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சிகள் மற்றும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் மோதல் சூழலால் உருவாகியுள்ள நிச்சயமற்ற தன்மைகளைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)



## 6,000 லீற்றர் டீசல் சேமித்தவர் கைது!

கொழும்பு, மார்ச் 26

அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமான முறையில் பெருமளவிலான எரிபொருளைச் சேமித்து வைத்திருந்த நபர் ஒருவர் கோனபொல பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரின் வீட்டின் வளவினுள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எரிபொருள் பௌசர் ஒன்று சோதனையிடப்பட்டபோது பௌசருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6,600 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டது.

அத்தோடு, குறித்த சந்தேகநபரின் வீட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 152 லீற்றர் டீசல் அடங்கிய ஒரு பீப்பாய்,120 லீற்றர் பெற்றோல் அடங்கிய ஒரு பீப்பாய் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மொரகஹஹேன பொலிஸார் மேலதிக [illegible] (ச-இ)

## மக்கள் கடமைக்கு இடையூறான அதிகாரிக்கு எதிராகத் தீர்மானம்

முல்லைத்தீவு,மார்ச் 26

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் கணுக்கேணி வட்டாரத்தில், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர், நிலஅளவைத்திணைக்களத்தில் பணியாற்றும் நிலையில், தனக்குரிய விடுமுறையைப் பெற்று மக்களைப் பணி செய்யவிடாது மேல் அதிகாரி தடுப்பதை எதிர்த்து, கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை அமர்வில் விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நில அளவைத் திணைக்கள சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், சுற்றறிக்கைக்கு அமைவாக கடமை விடுமுறைபெற்று, மக்களைப்பணிசெய்ய விடாது, குறித்த உறுப்பினரை பல தடவைகள் தடுத்துள்ளார். ஜனநாயக முறைப்படி மக்களைப் பணி செய்ய விடாது தொடர்ந்து தடுத்து வரும் அதிகாரியின் செயலைக் கண்டித்து சபை ஏகமனதாகக் கண்டன தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று சபையின் உறுப்பினர் த.அமலன் பிரேரணையை முன்வைத்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்று தீர்மானம் நிறைவேற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க அழுத்தம் கொடுங்கள்

### ஐ.நா பிரதிநிதியிடம் கோரிக்கை

மன்னார், மார்ச் 26

இலங்கையில் பல தசாப்தங்களாக நடைமுறையிலுள்ள கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்யவேண்டும். அதற்கு மாற்றாகக் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதிப்பதாக அமையக்கூடாது என ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதி நிதிக்கும் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர், மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளருமான ஜாட்சன் பிகிராடோவுக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் பொதுமக்களுடன் நடத்திய கலந்துரையாடல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மனு ஐக்கிய நாடுகள் சபை பிரதி நிதியிடம் கையளிக்கப்பட்டது.

அதில் தற்போதைய அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக உறுதியளித்தபோதிலும், அது இன்னும் நடைமுறையில் உள்ளது.

இந்தச் சட்டம் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினர் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களைக் குறிவைக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

அரசாங்கம் முன்மொழிந்துள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் பழைய சட்டத்தைவிடவும் கடுமையான விதிகளைக் கொண்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைப் பதிவுகள் மற்றும் பயங் கரவாதத் தடைச்சட்டத்தின் பயன்பாடு ஆகியவை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. + வரிச்சலுகை நீடிப்புடன் நேரடியாகத் தொடர்புடையவை.

எனவே, சர்வதேச உடன்படிக்கைகளை மதித்து, மனித உரிமைகளைப் பாதுகாக்கும்வகையில் இந்தச் சட்டங்களை இரத்துச்செய்ய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-56)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதனப் பெயர் மாற்றமும் ஆதன உபபிரிவிடலும்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 08. பொன்னம்பலம் வீதி. ஆதன இலக்கம் 24 (பழைய இலக்கம் 30) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பொன்னம்பலம் குமாரசாமி உ.கோ:- Mrs.K.மகேந்திரன் என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது. தற்போது பொன்னம்பலம் வீதி. கச்சாய் றோட். சாவகச்சேரியைச் சேர்ந்த ஹேமலதா ஜெயசவுந்தன் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு. எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்காக ஆதன உபபிரிவிடலுக்கு விண்ணப்பித்துள்ளார்.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்திற்கு 4ம் ஒழுங்கை. கச்சாய் வீதி. சாவகச்சேரியைச் சேர்ந்த கனகாம்பிகை மகேந்திரன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு S.இராஜகுலேந்திரா அவர்கள் முகதாவில் 736 இலக்க 24.09.2008 ஆம் திகதியில் பிரகடனப்படுத்தல் உறுதி முடித்துள்ளார்.

குறித்த உறுதியில் கனகாம்பிகை மகேந்திரன். "இவ்வாதனம் என்னால் 1988ம் ஆண்டு இல.22. இரத்தினவாசா. கல்லூரி வீதி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குமாரசாமி மகள் புஸ்பராணியிடம் கிரயத்துக்கு வாங்கி அறுதி உறுதி முடிக்கப்பட்டது. துரதிஷ்ட வசமாக நாட்டுச்சூழல் காரணமாக குறித்த உறுதியைப் பதிவுக்குக் கொடுத்தும் எடுக்க முடியாமல் போய்விட்டது. 1988ம் ஆண்டிலிருந்து இருபது வருட காலமாக ஆட்சி செய்து இவ்வாதனத்தின் சொந்தக்காரராய் இருந்து அன்று முதல் இன்று வரை இவ்வாதனத்தில் நீண்ட நெடுங்காலமாக நானே ஆட்சியிலும் உடமையிலும் இருந்து வருகிறேன்" என வெளிப்படுத்தி உறுதி முடித்துள்ளார்.

பின்னர் 4ம் ஒழுங்கை. கச்சாய் வீதி. சாவகச்சேரியைச் சேர்ந்த கனகாம்பிகை மகேந்திரன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு S.இராஜகுலேந்திரா அவர்கள் முகதாவில் 1015 இலக்க 30.09.2010 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை பொன்னம்பலம் வீதி. கச்சாய் றோட். சாவகச்சேரியைச் சேர்ந்த ஹேமலதா ஜெயசவுந்தன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை "கீரியன்புலோவளவு" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வ.சிவராசா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 22.04.1988 திகதியிடப்பட்டு 641ம் இலக்க வரைபடத்தில் காணப்படும் துண்டு 2 இதன் விலாசம் நிலப்பரப்பு நான்கு குழி இரண்டு தசம் நான்கு ஏழு (நில.பர.4 குழி 2.47)

இதன் எல்லைகள்

கிழக்கு : நமசிவாயம் நடராஜாவின் ஆதனம்
வடக்கு : சின்னத்துரை பெண் தில்லையம்மாவின் ஆதனம்
மேற்கு : தாமோதரம்பிள்ளை இராசநாயகமும் பெண் மனோரஞ்சினியினதும் ஆதனம் (குறித்த 641ம் இலக்கப் படத்தில் துண்டு 1)
தெற்கு : கனகாம்பிகை மகேந்திரனின் ஆதனமும் வீதியும்
இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்

இவ்வாதன பெயர் மாற்றம். ஆதன உபபிரிவிடல் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளராக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்
நகராட்சி மன்றம்
சாவகச்சேரி.

(CS/61058) J-1




Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சிலுவையின் தொடர்கதை..!

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் விவாதங்கள் இடம்பெறும் என்று அறிவித்துள்ளார் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் ஏழாவது நினைவு நாள் இன்னும் சில வாரங்களில் நாடெங்கும் முன்னெடுக்கப்படவுள்ள நிலையிலேயே, நாடாளுமன்ற விவாதங்கள் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படுவது நம்பிக்கை தரும் விடயமாக அமைந்திருந்தாலும், கடந்த ஏழு வருடத் தொடர்கதையின் மற்றொரு அத்தியாயம்தான் இதுவா? என்ற நியாயமான சந்தேகங்களும் எழவே செய்கின்றன.

ஒட்டுமொத்த இலங்கையையும் உலுக்கியெடுத்த ஈஸ்டர் தாக்குதல் பின்னணி மிகவும் கொடியது. இந்தத் தாக்குதல்கள் காரணமாக, ஓர் இனக்குழுமம் திட்டமிட்டு வஞ்சிக்கப்பட்டது. தேவையற்ற கறைகளும், களங்கங்களும் அந்த இனத்தின்மீது சுமத்தப்பட்டன. இனங்களுக்கு இடையில் இடைவெளிகளும், விரிசல்களும் வேரூன்றிப்போயுள்ள இலங்கையில், அந்த இடைவெளிகளை இன்னுமின்னும் அதிகரிக்கும் படியான நடவடிக்கைகள், ஆறாக் காயங்களாக மேற்கொள்ளப்பட்டன. ஆதலால், ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியையும், சூத்திரதாரிகளையும் மக்களிடம் வெளிப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால், இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிக மெதுவாகவே நகர்ந்து வருகின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் வழக்கில் பிள்ளையான், புலனாய்வுத்துறையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே உள்ளிட்டவர்கள் கைசெய்யப்பட்டிருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. பிள்ளையானையும், சாலேயையும் மையப்படுத்திச் செயற்பட்ட பெருந்தலைகள் பதற்றத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதும் அவதானிப்பு. ஆனால் அரசாங்கத்தின் விசாரணை வேகமும், அதன் வீச்சும் போதாது. சிக்கல்கள் நிறைந்த இந்தப் பயணத்தில், அழுத்தங்கள், சவால்கள், மிரட்டல்கள், திசைதிருப்பல்கள் என ஏராளமான விடயங்களை அரசாங்கம் எதிர்கொள்ளவேண்டியிருக்கும். இவற்றையெல்லாம் தாண்டித்தான் இந்த விசாரணைகளுக்கான முன்னெடுப்பை அநுர அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில், போதும்போதும் எனும் அளவுக்கு நாடாளுமன்ற விவாதங்கள் நடத்தப்பட்டுவிட்டன. எந்தக் கட்சியினர் எவ்வாறு பேசுவார்கள் என்பதைக் கேட்டுக் கேட்டு இலங்கையர்களின் காதுகள் புளித்துப் போய்விட்டன. எனவே, பட்ஜெட் அமர்வுகளைப் போன்று, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் 'வருடாந்த விவாதங்களை' நடத்துவதை விடுத்து நீதியை நிலைநாட்டும் பணியில் ஜனாதிபதி அநுரவும், அவர் தலைமையிலான அரசாங்கமும் ஈடுபடவேண்டும். கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்துக்கு முன்னர் குற்றவாளிகள் வெளிப்படுத்தப்படுவார்கள் என்று ஜனாதிபதி அநுர கூறியிருந்தார். ஆனால், இன்னும் இரு ஞாயிறுகளில் இன்னொரு ஈஸ்டரும் வரப்போகின்றது. சுரேஷ்சாலேயின்கைதுநீங்கலாக, விசாரணைகளில் மெச்சத்தக்க முன்னேற்றங்கள் இல்லை என்பதே கசப்பான உண்மை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று**

**பொருள்:** தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை, துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை.




# இளம் தொழில் முயற்சியாளருக்கு அரசாங்கத்தால் சலுகைக் கடன்!

கொழும்பு, மார்ச் 26

**அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடத்துக்கமைய, அடுத்த 5 ஆண்டுகளில் 50,000 புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் இலக்கை அடைவதற்காக இளைஞர்களுக்கு நிதி வசதி மற்றும் வழிகாட்டல்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இதற்கமைய 2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக இத்திட்டத்தின் ஒரு படிமுறையாக 500மில்லியன்ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இந்தக் கடன் திட்டத்தை மேலதிகமாக முன்னெடுத்துச் செல்வதற்காக 2026ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன்கள் ஆண்டுக்கு 4% சலுகை வட்டி வீதத்தின்கீழ் வழங்கப்படவுள்ளன.

இளைஞர் தொழில் முயற்சியாளர்கள் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஊடாக இக்கடன் வசதியினைப்பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான வழிகாட்டல்களை வெளியிடுவது மற்றும் திட்டமிடப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாகக் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரினால் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (ச-இ)




# பேருந்து விபத்து 12 பேர் காயம்!

கொழும்பு, மார்ச் 26

பொலநறுவை பிரதான வீதியில் பக்தர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில் 12 பேர் காயமடைந்துள்ளனர். பேருந்திற்குள் சிக்கியிருந்தவர்களை கந்தகாடு இராணுவ முகாம் அதிகாரிகள், பொலிஸார் இணைந்து மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். பேருந்துச் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே இந்த விபத்துக்குக் காரணம் என விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# சஜின் வாஸ்க்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 26

சுமார் 243.8 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளை சட்டவிரோதமான முறையில் ஈட்டிய குற்றச்சாட்டின்பேரில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவை எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்போது சந்தேகநபர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட பிணைக்கோரிக்கையையும் நீதிவான் நிராகரித்தார். (ச-இ)





# போதைப்பொருள்கள் கடத்தல் பெண்ணின் சொத்து முடக்கம்

கொழும்பு, மார்ச் 26

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பெண் சந்தேகநபர் ஒருவருக்குச் சொந்தமான 300 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சொத்துக்களைப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். போதைப்பொருள் வர்த்தகத்தினால் ஈட்டப்பட்ட வருமானத்தில் இந்தச் சொத்துகள் கொள்வனவுசெய்யப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. அதற்கமைய கொழும்பு 14 மற்றும் ஜாஎல பகுதிகளில் அமைந்துள்ள 514 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய காணி, 4 கடை அறைகள், மூன்று மாடி வீடு மற்றும் 59 இலட்சம் ரூபா பெறுமதியுடைய 6 வங்கிக் கணக்குகள், 30 மில்லியன் ரூபா பெறுமதியான மற்றுமொரு சொகுசு வீடு ஆகியவற்றை, பணமோசடித் தடுப்புச் சட்டத்தின்கீழ் முடக்குவதற்கான உத்தரவுகளை நீர்கொழும்பு மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றங்கள் பிறப்பித்துள்ளன. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - பங்குனி 13
27.03.2026
சுபநேரம் : 06.14 - 07.44
ராகுகாலம் : 10.44–12.14

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media




# சனிப்பெயர்ச்சிப் பலன்



## தனுசு

உங்கள் ராசிக்கு, வாக்கிய பஞ்சாங்கப்படி 6.3.2026 முதல் 24.4.2028 வரை, சுகவீடான 4ஆம் வீட்டில் அமர்கிறார் சனிபகவான். அர்த்த்ராஷ்டம சனி ஆயிற்றே எனச் சிலர் யோசிக்கலாம். சஞ்சலம் தேவையில்லை. எதையும் சமாளிக்கும் மனப்பக்குவத்தைப் பெறுவீர்கள்.

சனிபகவான் ஆட்சிபெற்று அமர்வதால், குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். சிலர், சொந்த ஊரை விட்டு இடம்பெயர்வார்கள். அதேநேரம், பிள்ளைகளின் நடவடிக்கையில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். இந்த ராசியைச் சேர்ந்த பெண்களுக்கு பணியில் முன்னேற்றம் உண்டு. புது டிசைனில் நகைகள் சேரும்.

எனினும் சனிபகவானின் நிலைப்படி, இந்தக் காலக்கட்டத்தில் சின்னச் சின்ன வேலைகளிலும் அலைச்சல் உண்டாகலாம். மற்றவர்களை நம்பி முக்கியமான பொறுப்புகளை ஒப்படைக்கவேண்டாம். செலவுகள் அதிகரிக்கும். வீடு வாங்குவது, கட்டுவது கொஞ்சம் இழுபறியாகி முடியும். கட்டட அனுமதி பெறுவது அவசியம்.

எதன் பொருட்டும் அதிக வட்டிக்குக் கடன் வாங்கவேண்டாம். தாய்வழிச் சொத்துகளில் சிக்கல்கள் வரலாம். நீண்ட நாள்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த வெளிநாட்டு விசா இப்போது கிடைக்கும். இரவுநேரப் பயணங்களில் கவனம் தேவை.

சனிபகவான் 2.4.2026 முதல் 14.4.2027 வரை உத்திரட்டாதியில் செல்லும் காலத்தில், பணவரவு, செல்வாக்கு உண்டு. புதிய சொத்து வாங்குவீர்கள். அரசு வேலைகள் உடனே முடியும்.

இந்தச் சனிப்பெயர்ச்சிக் காலத்தில் சனிபகவான், உங்கள் ராசியைப் பார்ப்பதால், அவ்வப்போது சோர்வு, அலைச்சல் வந்துபோகும். அடிக்கடி கோபப்படுவீர்கள். எனினும் 6ஆம் இடமும் சனிப்பார்வையைப் பெறுவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். வருங்காலத்திற்காகச் சேமிப்பீர்கள். வியாபாரிகளே, போட்டிகள் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களைக் கனிவாக நடத்துங்கள். வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்கள் மூலம் விபரீத இலாபம் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் கறாராக இருங்கள். எலெக்ட்ரானிக்ஸ், கம்பியூட்டர், மூலிகை வகைகளால் அதிக ஆதாயம் அடைவீர்கள்.


உங்கள் ராசிக்கு 10ஆம் இடமான கன்னியிலும் சனிப்பார்வை விழுகிறது. உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். புதுப் பொறுப்புகளும் உங்களை நம்பித் தரப்படும். சிலர், வேறு நிறுவனத்திற்கு மாறுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். கணினித் துறையினருக்குப் பார்வைக் கோளாறு, தசைப் பிடிப்பு வந்து நீங்கும். புதிய சலுகைகள் தேடிவரும்.




## தூய ஆய்வே மனமாற்றத்தின் ஊற்று

"நீங்கள் உங்கள் கண்ணிலிருக்கும் மரக்கட்டையைப் பாராது பிறர் கண்ணிலுள்ள துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன். வெளிவேடக்காரரே உங்கள் கண்ணிலுள்ளதை எடுத்து எறிந்து விட்டு பிறரின் கண்களைச் சுத்தம் செய்ய முயலுங்கள்". அதாவது நாம் அடிக்கடி பிறருடைய தவறுகளை மிகைப்படுத்தி கடுமையாக விமர்சனம் செய்கின்றோம். அவ்வாறு செய்வதற்கு எமக்கு உரிமையில்லை என்கிறார் கிறிஸ்து. தனது நிலையை அறியாது அடுத்தவரை குறைகூறும் போக்கு முறையாகாது. தன்னை முழுவதும் அறிவது தான் வாழ்க்கையின் முதற்படி. அவன்தான் குறைநிறைகளோடு மற்றையோரையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை அடைய முடியும். தான் செய்யும் தவறுகளை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ நெறிகளைக் கடைப்பிடிப்பவன் தான் பிறருக்கு வழிகாட்ட முடியும். இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவதே மேல் என்பதை உணரவேண்டும். மற்றவர்களிடம் உள்ள நற்குணங்களை, சேவை மனப்பான்மையை தட்டிக் கொடுத்து ஊக்குவிக்க முயலவேண்டும். குற்றம் கூறுவதை விடுத்து அதிலிருந்து மீண்டெழ வழியைக் காட்டவேண்டும். எம்மிடம் சுயஆய்வுடன் கூடிய தூய்மையான சிந்தனை உண்டென்றால் நாம் சரியானவற்றைப் பேசவும் செயற்படுத்தவும் வழிகாட்டவும் முடியும்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை



# ஒரு இலட்சம் ஏக்கர் காணிகள் கிழக்கு மாகாணத்தில் அபகரிப்பு!

### காணி மீட்பு வலையமைப்பு தெரிவிப்பு

திருகோணமலை, மார்ச் 26

கிழக்கு மாகாணத்தில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் அரசின் பொறிமுறைகள் ஊடாக சுவீகரிக்கப்பட்டுவருகின்றன என்று காணி மீட்புக்கான வலையமைப்பு தெரிவித்துள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான 'காணி வாரத்தை' முன்னிட்டு, திருகோணமலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறைவடைந்து பல வருடங்களாகியும், மக்கள் தமது நிலங்களுக்கான முறையான ஆவணங்களைப் பெற முடியாமல் தவித்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் மக்களின் பூர்வீகக் காணிகள், விவசாய நிலங்கள் மற்றும் கலாசார இடங்கள் திட்டமிட்ட முறையில் அபகரிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக தொல்லியல் இடம், பாதுகாப்புப் பகுதி, வன வளப்பகுதி, பூஜா பூமி இடம், வன விலங்குப் பகுதி, அபிவிருத்தி இடம், சுற்றுலாப் பிரதேசம் என அடையாளப்படுத்தி மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

எனவே பாதிக்கப்பட்ட மக்களின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், காணி உரிமையை உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

### வடக்கு மக்களுக்கு

# காணி உரிமங்கள் வழங்குவதற்கு ஐ.நா.வின் ஒத்துழைப்பு அவசியம்!

### ஆளுநர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், மார்ச் 26**

**வடக்கு மாகாணத்தில் போர்ச்சூழல் காரணமாக காணிகளின் ஆவணங்களை இழந்துள்ள மக்களுக்கு, மீண்டும் அதைப் பெற்றுக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பு அவசியம் என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அண்ட்ரூ பிரஞ்சிடம், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வலியுறுத்தினார்.**

இருவருக்கும் இடையிலாக விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாகக் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய ஆளுநர், கடந்த காலப் போர்ச்சூழல் காரணமாகப் பலரின் காணி ஆவணங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. தற்போது மக்களிடமும் காணி ஆவணங்கள் இல்லை. அரச [illegible]கான பதிவுகள் இல்லை. இதனால், தமது காணிகளுக்கான உரித்துகளை உறுதிப்படுத்தமுடியாமல் மக்கள் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். மக்களின் காணிப்பிணக்குகளைத் துரிதமாகத் தீர்த்து உரிய காணி உரித்துகளை வழங்க வேண்டியது மிக முக்கியமான தேவையாகும். இதற்காக அரசாங்கம் ஏற்கனவே 'ஹிமிகம' (உரிமை) திட்டத்தையும் ஆரம்பித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். அத்து[illegible] சிறு மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகளை மேம்படுத்துதல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒற்றைச் சாளர முறைமையை உருவாக்குதல், காணி விடுவிப்பு மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான தொழில்நுட்ப ஆதரவைப் பெறுதல் மற்றும் பசுமைக் காலநிலை நிதி போன்ற சர்வதேச நிதியங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புக்கள் தொடர்பிலும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வன்னியில் வீடமைப்புத்திட்டம் மூன்று ஆண்டுகளில் முடிவுறும்!

## அரசாங்கம் உறுதி

**கொழும்பு, மார்ச் 26**
**கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வன்னி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நிதிப்பற்றாக்குறை மற்றும் பல்வேறு காரணங்களால் பாதியிலேயே கைவிடப்பட்ட வீடுகளை எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் முழுமையாகக் கட்டிமுடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி.சரத் தெரிவித்துள்ளார்.**

கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார். ஜனாதிபதியின் விசேட கவனத்தின்கீழ், ஒரு வீட்டுக்கு வழங்கப்பட்டு வந்த 15 இலட்சம் ரூபா நிதியானது தற்போது 20 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் வடக்கு - கிழக்கில் 2,500 மீள்குடியேற்ற வீடுகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வன்னிப் பகுதி உட்பட வடக்கு-கிழக்கில் எஞ்சியுள்ள அனைத்து வீடுகளையும் முறையான வேலைத்திட்டத்தின்கீழ் அடுத்த 3 ஆண்டுகளுக்குள் முழுமையாகக் கட்டிமுடிக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-246)

**எரிபொருள் விலையேற்றத்தால்**

# வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் இழப்பு



மன்னார், மார்ச் 26
எரிபொருள்கள் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு காரணமாக, வடக்கு மாகாண மீனவர்கள் பலர் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் சுட்டிக்காட்டியுள்ளார்.
மன்னாரில் உள்ள அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
எரிபொருள் பிரச்சினை உலகளாவிய ரீதியில் உள்ள போதும், அதன் தாக்கம் இலங்கையில் அதிகம். குறிப்பாக வடமாகாணத்தில் கரையோரங்களை அண்டி வாழும் மீனவக் குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
கடந்த காலங்களில் பொருளாதார நெருக்கடி, இந்திய மீனவர்களின் அத்துமீறல், டித்வா புயல் தாக்கம் என மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுவருகின்றனர். தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு, இனிவரும் காலங்களில் ஏற்படப்போகும் விலையேற்றம் என இன்னும் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.
எனவே அரசாங்கம் மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு நிவாரணம் அல்லது சலுகைகளை வழங்கவேண்டும்- என்றார். (க-213)



# இடமாற்றம் வழங்கக்கோரி ஆசிரியர்கள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
நீண்டகாலமாக வடமாகணத்தின் வெளிமாவட்டங்களில் கடமை புரிந்த ஆசிரியர்கள், தங்களுடைய இடமாற்றத்தைச் சொந்த இடங்களுக்கு மீண்டும் வழங்குமாறு வலியுறுத்தி, வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு முன்னால் அண்மையில் அமைதியான முறையில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.
இடமாற்ற சபையில் இடமாற்றம் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில், அதனைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். 13 வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாகாணப் பணிப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர், வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கும் சென்றனர்.
"இடமாற்றம் சரியான முறையில் உள்வாங்கப்படாத காரணத்தால், குடும்பச் சூழ்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் திருமணம் செய்து கொண்ட ஆசிரியர்கள் குழந்தைப்பேற்றைப் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளனர். குறிப்பாக நீண்ட தூரம் போக்குவரத்துச் செய்து, மீண்டும் வீடுகளுக்குத் திரும்ப நீண்ட நேரமாவதால், பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளைச் சரியான முறையில் கவனித்துக்கொள்ளமுடியாத நிலைமை உள்ளது. இதனால் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே இந்த இடமாற்றக் கொள்கையை மாகாணக் கல்விப் பணிப்பாளர் சரியான முறையில் நடைமுறைப்படுத்தத் தவறின், எதிர்காலத்தில் வீதிக்கு இறங்கிப் போராட்டம் செய்யும் நிலை ஏற்படும்" என்று ஆசிரியர்கள் தெரிவித்தனர். (க-21-66)



# மன்னர்கள் பயன்படுத்திய நெல் வட்டுக்கோட்டையில் அறுவடை

யாழ்ப்பாணம், மார்ச் 26
இந்தியாவில் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர், மன்னர்களால் பயன்படுத்தப்பட்ட கறுப்புக் கவணி, மாப்பிள்ளை சம்பா மற்றும் கருஇழை ஆகிய நெல்லினங்கள் வட்டுக்கோட்டையில் விதைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை அறுவடை செய்யப்பட்டன. இந்த நெல்லினங்கள் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு, இலங்கையில் முதற்தடவையாகப் பயிரிடப்பட்டது. நெல் அறுவடையைத் தொடர்ந்து மீண்டும் பாரம்பரிய முறைப்படி உழுது, சிறுதானியப் பயிரான பயறு விதைக்கப்பட்டது. நிகழ்வில் அனைவருக்கும் பொங்கல் பரிமாறப்பட்டது. தொடர்ந்து யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தால், விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன. கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கொஸ்தா, விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-27)

யாழ். இந்திய துணைத் தூதரக ஏற்பாட்டில், இந்திய திரைப்பட விழாவின் வண்ணமயமான கதை சொல்லல் கொண்டாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி கலந்துகொண்டார். (ச-159)





# யாழில் எரிபொருள் விநியோகம் பிரதேச செயலர்களுடன் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்.மாவட்டத்தில் சீரான எரிபொருள் விநியோகம் தொடர்பில், பிரதேச செயலர்களுடனான கலந்துரையாடல், யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில், மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கலந்துரையாடலில் சகலபிரதேசசெயலர்பிரிவுகளிலும், சீரான பொறிமுறை ஊடாக எரிபொருள் விநியோகத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக உரிய அறிவுறுத்தல்கள் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்டன. அத்தியாவசிய உணவுப்பொருள்களைக் கொழும்பிலிருந்து எடுத்துவருதல், உள்ளூர் உற்பத்திப்பொருள்களை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லுதல், விவசாயம், மீன்பிடி போன்ற அத்தியாவசியத் தேவைப் பாடுகளுக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், மாவட்ட மேலதிக செயலர் (காணி) பா.ஜெயகரன், உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# யானைகளால் தினமும் அழிவு கட்டைக்காடு மக்கள் விசனம்

**யாழ்ப்பாணம்,மார்ச் 26**

**வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, கேவில் பகுதியில் யானைகளின் அட்டகாசம் தினமும் தொடர்வதால், அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். தமது சொத்துகளுக்கும் சேதம் விளைவிப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

கேவில்பகுதிக்கு யானைகள் திட்டமிட்டு கொண்டுவரப்பட்டு விடப்பட்டுள்ளன.

நாம் அதிகாரிகளுக்கு உரிய முறையில் அறிவித்தும் யானைகள் ஏற்படுத்திய சேதத்தை அவர்கள் இன்னும் பார்வையிடவில்லை. ஒரு சில தினங்களுக்கு முன்பு கேவில் கடற்கரைக்கு வருகைதந்த ஐந்துக்கும் மேற்பட்ட யானைகள், அங்கிருந்த 36 க்கும் அதிகமான தென்னங்கன்றுகளை நாசம் செய்தன.

யானைகள் சேதம் ஏற்படுத்திய இடத்தில் இருந்து 50 மீற்றர் தொலைவில் இராணுவமுகாம் இருக்கின்றது. அவர்களுக்கு யானைகள் வந்தது தெரியவில்லை என்று கூறுகின்றனர். வடமராட்சி கிழக்கின் பெரும் நிலப்பரப்பு தேசிய பூங்கா என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதனை உறுதிசெய்யும் விதமாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் திட்டமிட்டே இந்த யானைகளை வடமராட்சி கிழக்கு காட்டுப் பகுதிக்குக் கொண்டு வந்து விட்டுள்ளனர் என்று எமக்குச் சந்தேகமாக உள்ளது.

யானைகளால் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு முன்னாயத்தம் செய்யவேண்டும். ஏற்பட்ட அழிவுகளுக்குக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும்.- என்றனர். (க-27)



## கலைப்பீடாதிபதியானார் பேராசிரியர் பிரதீபராஜா

யாழ்ப்பாணம்.மார்ச் 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய கலைப்பீடாதிபதியாகப், பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், சிரேஷ்ட பேராசிரியருமான நாகமுத்து பிரதீபராஜா நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஏற்கெனவே யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் பீடாதிபதியாகச் செயற்பட்ட பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராமின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில், கலைப்பீடத்தின் புதிய பீடாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்டவர் என்ற அடிப்படையில் நாகமுத்து பிரதீபராஜா புதிய கலைப்பீடப் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் எதிர்வரும் 3 வருடங்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாகக் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-66)

## சந்தைப்படுத்தல் சபைக்கு வடக்கிலிருந்து முதன்முதலாக 12,000,000 கிலோ நெல் விநியோகம்

கிளிநொச்சி.மார்ச் 26



வடமாகாணத்தில் எந்தவொரு ஆண்டும் இல்லாதவாறு, இந்த வருடம் முதன்முதலாக, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு, ஒரு கோடி இருபது இலட்சம் கிலோகிராம் நெல் விவசாயிகளால் வழங்கப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடமாகாண பதில் முகாமையாளர் தவராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள வடமாகாண நெல் சந்தைப்படுத்தல் சபையின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவரின் ஒழுங்குபடுத்தலிலும், விவசாய அமைச்சரின் ஆலோசனைக் கமையவும் வடமாகாணத்தில் மிகவும் வினைத்திறனாக நெல் கொள்வனவு இடம்பெற்றுவருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் 3 களஞ்சியசாலைகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 களஞ்சியசாலைகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 களஞ்சியசாலைகளிலும், வவுனியா மாவட்டத்தில் 6 களஞ்சியசாலைகளிலும் நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. தனியார் துறையினரைவிட அதிக இலாபம் கிடைப்பதாலும், முன்னைய காலங்களைவிட விரைவாக விவசாயிகளுக்குப் பணம் கிடைப்பதாலும் விவசாயிகள் மிக ஆர்வமாக எமக்கு நெல்லை வழங்கியுள்ளனர். -என்றார். (க-113)

நல்லூர் ஸ்ரீ கைலாசநாத பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கான, கர்மாரம்பக் கிரியைகள் நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் 29ஆம் திகதி காலை 6 மணி முதல் 30ஆம் திகதி மாலை 6 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9.50 மணி முதல் 11 மணிவரையுள்ள சுபநேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். (க)

படம் ஐ. சிவசாந்தன்



## வாய் சுகாதார தினத்தில் மன்னாரில் விழிப்புணர்வு

மன்னார், மார்ச் 26

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு, வாயின் மகிழ்ச்சி, வாழ்வின் மகிழ்ச்சி எனும் கருப்பொருளில் மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையின், வாய் சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில், விழிப்புணர்வு நிகழ்வு, மன்னார் பிராந்திய பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையில் நேற்று இடம்பெற்றது.

பிராந்திய பல் மருத்துவ நிபுணர் மருத்துவர் ஏ.றொபேட் சில்வா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆசாத் எம். ஹனிபா கலந்து கொண்டார்.

நிகழ்வில் வாய் சுகாதாரம் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டதுடன், வாய் சுகாதாரம் இன்மையால் ஏற்படும் ஆபத்துகள், வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணம் மற்றும் அறிகுறிகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது. தொடர்ந்து வாய்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (க-56)



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில், கார்த்திகை உற்சவம் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது. (க-17)



செல்வச்சந்நிதி ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை, இடம்பெற்ற கார்த்திகை உற்சவத்தில், சிறப்பு அபிஷேகத்தைத் தொடர்ந்து, சுவாமி வீதி வலம் இடம்பெற்றது. (க-17)






## தொலைபேசியால் மாளும் மனிதம்; மாங்குளத்தில் இறுவட்டு வெளியீடு

மாங்குளம் வன்னிவிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த கவிஞர் ஆர்.கண்ணன் எழுதிய, 'தொலைபேசியால் மாளும் மனிதம்' என்ற பாடல் இறுவட்டு கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டது. தாயக கலைஞர்களின் படைப்பான இந்தப் பாடலுக்கு பி.எஸ்.விமல் இசையமைத்துள்ளார். ஒலிசேர்க்கையை எம்.பசியும், பாடலை என்.மணனும் பாடியுள்ளனர். இறுவட்டை நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வெளியீட்டு வைக்க, கே.பி.கே. நிறுவனத்தின் தொழில் அதிபர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். விருந்தினர்களுக்கு இறுவட்டுக்கள் வழங்கப்பட்டன. (க-19)

## சான்றிதழ் வழங்கல்



பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட மூன்று மாத தையல் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த 34பேருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது. தொடர்ந்து 14 பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கான ஐந்து மாதத்திற்கான சத்துணவு வழங்கும் திட்ட ஆரம்ப நிகழ்வும் இடம்பெற்றது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் அ.சிவனருள்ராஜா, மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.சத்தியராகவன், பாடசாலைகளின் முதல்வர்கள், பெற்றோர், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது தையல் பயிற்சியில் பங்குபற்றியவர்களின் விற்பனைக் கண்காட்சியும் இடம்பெற்றது. (41-113)

## சாவகச்சேரி சுகாதாரசேவைகள் பணிமனைக்கு புதிய அதிகாரி

யாழ்ப்பாணம், மார்ச் 26

சாவகச்சேரி சுகாதாரசேவைகள் பணிமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியாக மருத்துவர் பசுபதி அச்சுதன் கடந்த திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (எ-41-100)



## யாழ்.கட்டளைத் தளபதியுடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்.மாவட்டப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர்.ஜெனரல் கே.ரி.பீ.டி.சில்வா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பு, பலாலியில் அமைந்துள்ள பாதுகாப்புப் படைத்தலைமையகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டிலிருந்த காணிகளை, கட்டம் கட்டமாக விடுவித்தமைக்காக, வடக்கு மாகாண ஆளுநர் நன்றி தெரிவித்தார். அத்துடன் வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்படாதுள்ள ஏனைய காணிகளை விடுவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும், கட்டளைத் தளபதியுடன் விரிவாக ஆராய்ந்தார்.

வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களிடையே தேசிய மாணவர் படையணியின் செயற்பாடுகளை ஊக்குவிப்பது தொடர்பில், கல்விச் சமூகத்தினருடன் கலந்துரையாடியமைக்கு, கட்டளைத் தளபதி பாராட்டுகளைத் தெரிவித்தார். (க-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈரான் - அமெரிக்கா போர் பாகிஸ்தான் மத்தியஸ்தம்


## கண்ணீர் அஞ்சலி



**கந்தர் சிவஞானம்**

95 ஆண்டுகள் நிறைந்த வாழ்வு,
அன்பு, ஒழுக்கம், உழைப்பு,
குடும்ப பாசம் அர்ப்பணிப்பு
நிறைந்த வாழ்க்கை என்றும்
இதயத்தில் நினைவில் இருக்கும்.
அன்னாரின் இறுதிக்கிரியை
26 March 2026 at 10:00am
Hamilton Harron Funeral Home
5390 Fraser St, Vancouver,
BC V5W 2Z1 இல் நடைபெறும்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைத் துதிக்கின்றோம்.

தோற்றம் 02.05.1930 - மறைவு 17.03.2026

**சோமசுந்தரம் பரிமளம் குடும்பத்தினர்**
**மட்டுவில் தெற்கு**
Gnani - +604-782-6306




இஸ்லாமாபாத், மார்ச் 26

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் போரை முடிவுக்குக் கொண்டு வர, அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை நடத்த பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ஆசிம் முனீர், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புடன் தொலைபேசியில் உரையாடி, இந்த மத்தியஸ்தம் குறித்துப் பேசியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ட்ரம்ப் நிர்வாகம் ஈரானிடம் சமர்ப்பித்துள்ள 15 அம்ச போர்நிறுத்தத் திட்டத்தை பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் மூலமே ஈரானிடம் வழங்கியதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பேச்சுகளை நடத்துவதற்கான இடமாகப் பாகிஸ்தான் தனது தலைநகர் இஸ்லாமாபாத்தை முன்மொழிந்துள்ளது. இந்தப் போக்கு இந்தியாவிற்கு ஒரு 'ராஜதந்திர பின்னடைவு' என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 09 ❖ 10 ❖ 1930



மறைவு 23 ❖ 03 ❖ 2026

**DR. ஜோய் கனகராஜா**
(இணுவிலில் உள்ள McLeod மருத்துவமனையில் பணியாற்றியவர்)

காலஞ்சென்ற ஏ. சி. கனகராஜாவின் அன்பு மனைவியும், தேவபிரசாத் (சந்திரன்) மற்றும் தேவப்பிரியா (சுட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயா மற்றும் தாரணியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திரு. மற்றும் திருமதி டா.ரா. குணசேகரம் (வட அராலி) அவர்களின் அருமை மகளும், காலஞ்சென்ற டாக்டர் கிறிஸ்டபெல் (Christa) அருமைநாயகம், ராஜன் மற்றும் பாலன் குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

பூதவுடல் பார்வைக்காக மார்ச் 27, வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும், மார்ச் 28, சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 2.45 மணி வரையிலும் கல்கிசை மஹிந்த பாலரில் வைக்கப்படும்.

**இறுதி ஆராதனை:** 2026 மார்ச் 28 ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 2.45 மணி

**நல்லடக்கம்:** மாலை 4.00 மணிக்கு கல்கிசை மயானத்தில் செய்யப்படும்



## மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 09 • 1937



மறைவு 23 • 03 • 2026

**சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை**

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல் வடக்கு மற்றும் 118/6 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை அவர்கள் கடந்த (23.03.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லக்கண்ணு தம்பதிகளின் அன்பு மருமகனும், திலகேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாபரன் (தயா), அற்புதராஜா (கனடா), பவானி, லலிதா, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, தேவநேசன், சிவநேசன், தயாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஷ்பலதா, சுசி (கனடா), யோகராசா, காலஞ்சென்ற சம்புலிங்கம், பிரபா, கௌரீஸ்வரி, பிரியதர்சினி, பரணிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாகரன்-யசோதா, கிருசாந்தி-அருணண், கஜாகரன்-ஜனனி, அஜி, கஜரூபன்-ஜனனி, மதுரா-கஜந்தன், நதீசன், மிதுர்சிகன், மிதுர்சிகா, லதீசன், யோகிஷா, அஸ்வின், அபீரன், டிதுஷன், தருணிஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், டியானா, வாகினி, பவன் ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிவயோகம், இராசையா, அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான வரதராஜா, சொர்ண காந்தி, மற்றும் அருமைநாயகம், இராசகுமார், காலஞ்சென்றவர்களான செல்வகுமார், சுந்தரம், முத்துத்தம்பி, இரத்தினம், கார்திகேசு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2026) வெள்ளிக்கிழமை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**118/6 பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
தொ.இல. **077 046 3865**

தகவல்: குடும்பத்தினர்

(cs.61064) (N-1)



## மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 08 • 1974



மறைவு 23 • 03 • 2026

**திருமதி யோகானந்தி லிங்கேஸ்வரன்**

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகானந்தி லிங்கேஸ்வரன் அவர்கள் கடந்த (23.03.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் லிங்கேஸ்வரனின் அன்பு மனைவியும், புஸ்பலிங்கம் - இராஜேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜீவானந்தன் (ப.நோ.கூ.சங்கம் - நல்லூர்), சதானந்தன் (கனடா), குகானந்தன் (ஸ்ரீகுகன் பான்சி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மதிவதனி (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), வனஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், நிருஜா, கேசிகா, வைஷ்ணவி ஆகியோரின் அன்புத் தாயாரும், குகபரன், சதுஸ்ரிகன், பிருந்துஜன், துஷாந்தன், ஆர்த்திகன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26.03.2026) வியாழக்கிழமை இலங்கை நேரம் பி.ப 06.30 மணிக்கு (கனடா நேரம் மு.ப 9.00) Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஜீவானந்தன் - 077 926 3947
குகானந்தன் - 077 611 6663

தகவல்: குடும்பத்தினர்
மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(CS/31552) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல் தொடரும்



## நெதன்யாகு தெரிவிப்பு

**ஜெருசலேம், மார்ச் 26**

**ஈரான் மீதான தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.**

அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் நாடுகளிடையே கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்றுவந்த போர், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார்.

அமெரிக்கா-ஈரான் இடையே போர்நிறுத்தப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், ஈரானிய மின் நிலையங்கள் மற்றும் எரிசக்தி உட்கட்டமைப்புகளுக்கு எதிரான அனைத்து இராணுவத் தாக்குதல்களையும் ஐந்து நாள்களுக்கு ஒத்திவைக்குமாறு போர் அமைச்சகத்துக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இந்தநிலையில், "ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் நான் பேசினேன். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இராணுவம் அடைந்துள்ள மகத்தான வெற்றியின் மூலம், நமது முக்கியமான நலன்களைப் பாதுகாக்கும் ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒரு வாய்ப்பு இருப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் நம்புகிறார். ஈரான் மற்றும் லெபனான் ஆகிய நாடுகள்மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவோம். அவர்களின் ஏவுகணைத் திட்டங்களையும், அணுசக்தித் திட்டங்களையும் நாம் நசுக்கி வருகின்றோம். மேலும் ஹிஸ்புல்லா மீது கடுமையான தாக்குதலைத் தொடர்ந்து வருகின்றோம். சில நாள்களுக்கு முன்பு, மேலும் இரண்டு அணு விஞ்ஞானிகளைக் கொன்றோம். மேலும், தாக்குதல் தொடரும். எந்தச் சூழ்நிலையிலும் நமது நலன்களை நாம் பாதுகாப்போம்" என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

(ஏ-இ)

# பேச்சு நடக்கவில்லை ஈரான் திட்டவட்டம்!

தெஹ்ரான், மார்ச் 26

அமெரிக்காவுடன் ஈரான் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறப்படுவதை ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகாய் மறுத்துள்ளார்.

ஹோர்மூஸ் நீரிணை குறித்த ஈரானின் நிலைப்பாட்டிலும், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நிபந்தனைகளிலும் எந்த மாற்றமும் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை குறித்த தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என ஈரான் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. உலகளாவிய எண்ணெய்ப் போக்குவரத்தில் முக்கியமான பங்குவகிக்கும் இந்த நீரிணை மீதான தனது பிடியில் ஈரான் உறுதியாக உள்ளது. பிராந்திய மோதல்களை அல்லது போரை நிறுத்துவதற்கு ஈரான் ஏற்கனவே விதித்துள்ள நிபந்தனைகளில் எந்த சமரசமும் செய்யப்போவதில்லை என்பதை பாகாய் தெளிவுபடுத்தியுள்ளார்.

(ஏ-இ)

# இடமாற்றத்துக்கு எதிராக ஆசிரியர்கள் இன்று போர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

சேவையின் தேவை என்ற அடிப்படையில் இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் சிலர், நல்லூர்ப் பகுதியில் உள்ள பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம் முன்பாக இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இடமாற்றத்துக்கு எதிராக ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்திருந்த நிலையில், இதுவரை அவர்களுக்கான பதில்கள் எவையும் வழங்கப்படவில்லை. இதையடுத்தே, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தரப்பால் இன்று காலை 8.30 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## எரிக்கப்போகிறது...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மனித உடலுக்கு அதி ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய உக்கிரமான வெப்பநிலையே நாட்டில் தற்போது நிலவுகின்றது. இந்த அனல்நிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கும். பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்டுள்ள 'எல் நினோ' தாக்கத்தால் கடலின் மேற்பரப்பு வெப்பநிலை சடுதியாக அதிகரித்து வருகின்றது. எனவே, வெப்பமான காலநிலையில் எதிர்வரும் நாள்களுக்கு எவ்வித மாற்றங்களும் இருக்காது.

சப்ரகமுவ, வடமேல், மேல், வடமத்திய மற்றும் தென் மாகாணங்களும், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களும் வெப்பநிலை அதிகரிப்பால் கடும் பாதிப்பை எதிர்கொள்ளும் வாய்ப்புள்ளது. கடும் வெப்பத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம் - என்றுள்ளது. (அ-ம)

## மோ.சைக்கிள்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியால் கடந்த 18ஆம் திகதி சைக்கிளில் பயணித்த அந்த முதியவரை, பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் மோதித் தள்ளியுள்ளது. இதையடுத்து படுகாயம் அடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-ம-26)

## சுரேஷ்...

தாக்குதல்கள் தொடர்பில் சுரேஷ் சாலே அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். 90 நாள்கள் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தற்போது அவர் விசாரணைகளை எதிர்கொண்டு வருகின்றார். இவ்வாறான நிலையில், நேற்றுமுன்தினம் அவர் திடீர் சுகவீனமுற்ற நிலையில், நீதிமன்ற அனுமதிக்கு அமைய கொழும்பு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ-ம)

## திருப்பாடுகள்...

மாலை 6.45 மணிக்கு இந்த ஆற்றுகை மேடையேற்றப்படவுள்ளது. 'காவிய நாயகன்' என்னும் பெயரில் இவ்வருட ஆற்றுகை இடம்பெறுகின்றது. (அ-ம)

## யாழ்....

சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து, காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அலுவலகத்தில் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் முகாமைத்துவக் கற்கைகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ-ம-26-66)

## மூத்த...

உதயன், சுடர் ஒளி, தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, தினக்குரல், தினகரன் உள்ளிட்ட பல பத்திரிகைகளினது பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றிய சலீம், மிகச் சிறந்த ஆய்வுக் கட்டுரையாளராக அறியப்பட்டிருந்தார். கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி 'அனார்கலி' என்ற பெயரில் அவர் எழுதிய கட்டுரைகள் பெரியளவில் பேசப்பட்டன. சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக ஊடகப் பணியாற்றிய சலீம், நூற்றுக் கணக்கான ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அவரின் ஜனாஸா நிந்தவூர் ரவாஹா பொது மயானத்தில் நேற்றுமாலை நல்லடக்கம் செய்யப்பட்டது. (அ-ம)

## நல்லை...

குருபூசை இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியரும், சிறந்த சொற்பொழிவாளருமான சுவாமிநாத தம்பிரான், தனது இல்லற வாழ்வின் கடமைகளை பூர்த்திசெய்த நிலையில், அதனைத் துறந்து சைவ சித்தாந்தம் போதித்த மெய்மை வழியில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தை 1966ஆம் ஆண்டு தோற்றுவித்தார். இரண்டாம் குருமகா சந்நிதானம் அடுத்த 50 ஆண்டுகள் அதனைப் பாதுகாத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம)

## மாந்தையில்...

இடம்பெறுகின்றது என்று வனவளத் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவலுக்கு அமைய அந்தப் பகுதியை அதிகாரிகள் சுற்றிவளைத்தபோது கிரவல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் தப்பியோடியுள்ளனர். இதையடுத்தே, கிரவல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட கனரக வாகனங்கள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு வனவளத் திணைக்கள அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. சந்தேகநபர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-35)

## ஆபத்தான...

குற்றக் குழுக்களுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் சர்வதேச போதைப்பொருள் வலையமைப்புடன் தொடர்புகளைப் பேணிய 29 சந்தேகநபர்கள் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தோனேசியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் சென்ற விசேட குழுக்களாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாயில் நாடக விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆரம்பக் கல்வி மன்றம் செம்முகம் ஆற்றுகைக் குழுவுடன் இணைந்து நடத்தும் நாடக விழா இன்று வியாழக்கிழமை காலை 08.30 மணியளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர்கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. குறித்த நிகழ்வில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் இளம் அரங்கச் செயற்பாட்டாளர் க.சீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)




# விலைச்சூத்திரத்தின்படி விலையேற்றப்படவில்லை

## அமைச்சர் நளிந்த விளக்கம்

கொழும்பு, மார்ச் 26

**உலக சந்தையில் ஏற்பட்டுள்ள அசாதாரண விலை உயர்வு காரணமாக, தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பினைத் தேசியமட்டத்திலான விலைச்சூத்திரத்தைக் கொண்டு கணிக்கமுடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 70-78 டொலராக இருந்தபோது விலைச்சூத்திரத்தைப் பயன் படுத்த முடிந்தது. ஆனால், தற்போது அது 130 டொலராக உயர்ந்துள்ளநிலையில், அந்தப் பெரிய மாற்றத்தை விலைச்சூத்தி ரத்தின்மூலம் ஈடுசெய்ய முடியாதுள்ளது. உலக சந்தையில் ஏற்படும் சிறிய மாற்றங்களை மட்டுமேவிலைச்சூத்திரத்தால்கையாளமுடியும். தற்போதைய இக்கட்டான சூழலில் அதன் மூலம் விலையைத் தீர்மானிக்க இயலவில்லை. எரிபொருள் விலை அதிகரித்தபோதிலும், அதன் முழுமையான சுமையையும் மக்கள் மீது அரசாங்கம் சுமத்தவில்லை. எரிபொருள் கொள்வனவு மற்றும் விலை முகாமைத்துவத்திற்காகத் திறைசேரி ஊடாக 20 பில்லியன் ரூபாயை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது - என்றார். (ச-இ)

**அலுவலக இடம் வாடகைக்கு தேவை**

சிறிய நிறுவனம் ஒன்றிற்கு முற்பணம் இல்லாமல் அல்லது குறைந்த முற்பணத்துடன், குறைந்த வாடகையுடன் அலுவலக இடம் வாடகைக்கு தேவை.

(மானிப்பாய், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, உரும்பிராய், பண்டத்தரிப்பு, சங்கானை, கொக்குவில், கல்வியங்காடு, பருத்தித்துறை, கொடிகாமம், மல்லாகம்) இவ்வாறான இடங்களில் விரும்பத்தக்கது.

(CS/31551) J-1

தொடர்புகளுக்கு:- 071 945 1945

# அதிக மின்சாரத்தேவை கடந்த திங்களன்று பதிவு

கொழும்பு, மார்ச் 26

நிலவும் வறட்சியான காலநிலையுடன், இலங்கையின் வரலாற்றில் அதிகபடியான மின்சாரத் தேவை கடந்த திங்கட்கிழமை பதிவாகியுள்ளதாக தேசிய கட்டமைப்புச் செயற்பாட்டு தனியார் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி பி. எல். பிரதீப் பியதர்ஷன பெரேரா தெரிவித்துள்ளார்.

மின்சாரத் தேவை அதிகரித்துள்ளதால் அனைத்து நுகர்வோரையும் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும். பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்கள் நாட்டில் வறட்சியான காலநிலையைக் கொண்டவை. இந்த வறட்சியுடன் மின்சாரத் தேவையும் அதிகரித்துள்ளது.

இலங்கையின் மின்கட்டமைப்பில் இதுவரை வழங்கப்பட்ட மின்சாரத் தேவையின் அதிகப்படியான அளவு கடந்த வாரம் திங்கட்கிழமை பதிவாகியுள்ளது அது 3,089 மெகாவாட்டாகும். அதேபோல் அன்றைய மின் நுகர்வு 60.56 கிகாவாட் மணித்தியாலங்களாகக் காணப்பட்டது. எனவே, மின்சாரத்தை முடிந்தவரை சிக்கனமாகப் பயன்படுத்துவது ஒரு நாடாக அனைவரதும் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# தூரப்பிதேசங்களில் பணியாற்றுவோருக்கு அரச விடுமுறை நாளில் மாற்றம் வேண்டும்

## சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 26

தூரப்பிதேசங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர் களுக்கு, வாராந்தம்வழங்கப்படும்புதன்கிழமை விடுமுறை நாளை மாற்றவேண்டும் என்று சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் கோரிக்கை விடுத்துள்ளார். வடக்கு மாகாணத்தில் அதிகமான அரச உத்தியோகத்தர்கள் வெளிமாவட்டங்களுக்குச் சென்று பணியாற்றுகின்றனர். இவர்கள் தமது அலுவலகப்பகுதிகளில் தங்கியிருந்தே பணியாற்றுகின்றனர். இதுவரை வாரஇறுதி நாள்களில் வெள்ளிக்கிழமை மாலையுடன் சொந்த ஊருக்குத் திரும்பிவிடுவர். தற்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள புதன்கிழமை விடுமுறை இவர்களுக்கு நன்மையளிக்கவில்லை. நாட்டின் எரிபொருள் நெருக்கடி நிலை குறித்து கவனத்திற்கொண்ட அரசாங்கம், இவ்வாறான அரச உத்தியோகத்தர்களின் நலனைக் கவனத்தில் கொள்ளவில்லை. எனவே, இந்த விடுமுறை தினத்தை வெள்ளிக்கிழமையாக மாற்றவேண்டும். அல்லது தூரப்பிரதேசத்தில் குறிப்பாக மாவட்டம் விட்டு மாவட்டம் சென்று கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பயனடையும் வகையில் விசேட ஒழுங்களைச் செய்யவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-159)



ஊர்காவற்றுறைப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டையும் சீருடையும் வழங்கும் நிகழ்வு பிரதேசசபையில் அண்மையில் நடைபெற்றது. (ச-9)

# புதிய நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 26

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 23ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் உடுவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது தலைவராக ப. மகேந்திரதாசன், செயலாளராக நா. மோகனதாஸ், பொருளாளராக ந. சுப்பிரமணியம், உபதலைவராக ந. சண்முகவேல், உபசெயலாளராக இ. குலசிங்கம் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக திருமதி நிர்மலா இன்பராஜ், மா. சீவரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org